**ஜூலை – 25**

# TNPSC துளிகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான போதைப் பொருள் பயன்படுத்தாத இளையோர்கள் என்ற தலைப்பில் மூன்று நாட்கள் அளவிலான இளையோர்களுக்கான நன்னம்பிக்கை உச்சி மாநாடு ஆனது காசி பிரகடனத்துடன் நிறைவடைந்தது.
- கேரள வேளாண் பல்கலைக் கழகத்தின் (KAU) வேளாண் வணிக தொழிற் வளர் காப்பகத்தில் நிறுவப்பட்டுள்ள ஆறு வேளாண் சார் புத்தொழில் நிறுவனங்கள், இராஷ்ட்ரிய கிருஷி விகாஸ் யோஜனா (RKVY) - RAFTAAR வேளாண் வணிக தொழிற் வளர் காப்பகத் திட்டத்தின் கீழ் மிகச் சிறப்பாகச் செயல்படும் முயற்சிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- நாகாலாந்தில் உள்ள கிஃபைர் மாவட்டத்தின் கீழ் உள்ள லாங்மாத்ரா பகுதி அதன் முதல் மாம்பழத் திருவிழாவைக் கொண்டாடியது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் 42வது சட்டப் பிரிவின் கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் NSDL என்ற பண வழங்கீட்டு வங்கியினைச் சேர்த்து உள்ளது.
- இந்தியப் படைப்பாக்க தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (IICT) மும்பையில் உள்ள NFDC வளாகத்தில் தனது முதல் வளாகத்தினைத் தொடங்கியது.
- உலகில் ஆண்டுதோறும் ஜூலை 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) பாராட்டு தினமானது நமது உலகத்தினை வடிவமைப்பதில் செயற்கை நுண்ணறிவின் மாறுதல் மிக்க ஆற்றலைக் கொண்டாடுகிறது.
- மத்திய சட்டத் துறை அமைச்சகமானது, புது டெல்லியில் உள்ள சாஸ்திரி பவனில் மகிளா ஆரோக்கிய கக்ஸ் எனும் உடற்பயிற்சிக் கூடத்தினைத் துவக்கியது.
    - இது அரசாங்க வளாகங்களுக்குள் பணியிட நல்வாழ்வை உருவாக்குவதற்கான முதல் வகையான முன்னெடுப்பாகும்.

# தேசியச் செய்திகள்

## SASCI திட்டம் 2025

- சுற்றுலா அமைச்சகமானது, SASCI திட்டத்திற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டிற்குள் சிறப்பாகக் காட்சியளிக்கும் பன்முகத்தன்மை கொண்ட சுற்றுலாத் தளங்களை உலகத் தரச்சான்றுகளுக்கு ஒப்பான மிகப்பெரும் தளங்களாக மேம்படுத்துவது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டம் தொடர்பாக சில மாநில அரசுகளால் சமர்ப்பிக்கப்பட்ட சில திட்ட முன் மொழிவுகளின் அடிப்படையில் இந்த இடங்களானது அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்தத் திட்டங்களானது தொடர்புடைய மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப் படுகின்றன.
- இந்தத் திட்டங்கள் ஆனது அதிகபட்சமாக 2 ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும், அதே சமயத்தில் இந்திய அரசானது இந்தத் திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை இதற்குரிய நிதியை வெளியிடும்.
- SASCI என்பது 'மூலதன முதலீடுகளுக்காக மாநிலங்களுக்குச் சிறப்பு உதவி – உலக

அளவில் முக்கியச் சின்னமாக உள்ள சுற்றுலா மையங்களை உருவாக்குதல்' (SASCI) என்பதைக் குறிக்கிறது.

- மாம்மல்லபுரத்தில் உள்ள நந்தவனம் பாரம்பரியப் பூங்காவின் மேம்பாடு மற்றும்
- நீலகிரியின் தேவலாவில் உள்ள மலர்த் தோட்டம் ஆகியன தமிழ்நாட்டில் இதில் அனுமதிக்கப் பட்ட திட்டங்களாகும்.




## இரண்டாவது NEDL பட்டியல்





- இந்திய நாட்டின் பொதுச் சுகாதார அமைப்பை மேம்படுத்துவதற்காக என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR) இரண்டாவது தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியலை (NEDL) வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் பொதுச் சுகாதார அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் எந்த வகையான நோயறிதல் சோதனைகள் தரப்படுத்தப்பட வேண்டும் மற்றும் கிடைக்கப் பெற வேண்டும் என்பதை வரையறுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கட்டாயப் பட்டியலில் பின்வருபவை அடங்கும்:
  - கிராம சுகாதார மையங்களில் ஆறு முக்கிய நோயறிதல் சோதனைகள் அளிக்கப் பட வேண்டும்.
  - ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்களில் (துணை மையங்கள்) சுமார் பதினைந்து சோதனைகள்,

- ஆரம்ப சுகாதார மையங்களில் (PHC) அறுபத்தொன்பது சேவைகள்,
- சமூக சுகாதார மையங்களில் (CHC) தொண்ணூற்றேழு சேவைகள், மற்றும்
- துணை மாவட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் நூற்று அறுபத்தைந்து சோதனைகள் வரை.

## DNA தடயவியல் சான்றுகளைக் கையாளும் வழிகாட்டுதல்கள்

- ❖ உச்ச நீதிமன்றமானது DNA தடயவியல் சான்றுகளை மிகவும் நன்கு நிர்வகிப்பதை தரப்படுத்தச் செய்வதற்காக நடைமுறை வழிகாட்டுதல்களின் தொகுப்பை வகுத்து உள்ளது.
- ❖ இந்த வழிகாட்டுதல்களின் படி குற்றவியல் சட்டத்தில் உள்ள தடயவியல் சான்றுகளின் அதிகப் பாதுகாப்பு தேவைப்படுபவற்றுள் ஒன்றை உள்ளடக்கிய நடைமுறைகளில் உள்ள முரண்பாடுகளை நீக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- ❖ பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டப் பயிற்சி பெற்றப் பணியாளர்களால் உயிரியல் மாதிரிகள் சேகரிக்கப்பட வேண்டும்.
- ❖ சேகரிக்கப்பட்ட மாதிரிகள் நியமிக்கப்பட்ட இடங்கள்/தடயவியல் ஆய்வகங்களுக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதோடு மேலும் அவை 48 மணி நேரத்திற்குள் விசாரணை அதிகாரிகளால் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ இதில் மாதிரிகளைக் கையாளுதல் மற்றும் பரிமாற்றத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் ஆவணப் படுத்தும் "சங்கிலித் தொடர்ப் பாதுகாப்பு" பதிவேடு என்பது பராமரிக்கப்பட வேண்டும்.




## சுற்றுலாத் துறை மற்றும் தொலைநோக்குக் கொள்கை 2047

- ❖ 2047 ஆம் ஆண்டிற்குள் இந்திய நாட்டின் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பை 10 சதவீதமாக உயர்த்த இந்திய அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.
- ❖ தற்போது, சுற்றுலாத் துறையானது இந்தியாவின் பொருளாதாரத்தில் 5 சதவீதம் முதல் 6 சதவீதம் வரை பங்களிக்கிறது.
- ❖ இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி ஒவ்வொரு 8 ஆண்டுகளுக்கும் இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ தற்போது, நமது பொருளாதாரத்தின் மதிப்பு 4 டிரில்லியன் டாலர் ஆகும், மேலும் இது 2047 ஆம் ஆண்டிற்குள் 32 டிரில்லியன் டாலரை நெருங்கும்.
- ❖ இந்தியாவின் உலகளாவியச் சுற்றுலாத் தரவரிசையானது 8வது இடத்திற்கு உயர்ந்து உள்ளது (WTTC அறிக்கை 2023).

| | Total GDP Contribution | | Total Travel & Tourism Jobs | |
|---|---|---|---|---|
| 2019 | 6.9% (of Total Economy) INR 17.43TN (USD 211.1 BN) | Change in 2020: -41.6% | 39.79 MN =9.0% (Share of Total Jobs) | Change in 2020 -27.3% |
| 2023 | 6.5% INR 19.13TN (USD 231.6 BN) | Annual Change: +18.4% (9.7% vs 2019) Economy Change: +7.1% | 42.94 MN =8.9% | Annual Change: +9.7% (7.9% vs 2019) |
| 2024 | 6.8% INR 21.15TN (USD 256.1 BN) | Annual Change: +10.6% (21.3% vs 2019) | 45.39 MN =9.2% | Annual Change: +5.7% (14.1% vs 2019) |
| 2034 | 7.6% INR 43.25TN (USD 523.6 BN) | CAGR (2024-2034): +7.4% Economy CAGR (2024-2034): +6.2% | 62.99 MN =11.0% | New Jobs (2034 vs 2024) 17.60 MN |

## புதிய கப்பல் சரக்கு ஏற்றுப் பட்டியல் சட்டம் 2025




- ❖ 169 ஆண்டுகள் பழமையான காலனித்துவ கால 1856 ஆம் ஆண்டின் இந்தியக் கப்பல் சரக்கு ஏற்றல் பட்டியல் சட்டத்தை மாற்றியமைக்கின்ற 2025 ஆம் ஆண்டு கப்பல் சரக்கு ஏற்றல் பட்டியல் சட்டத்தை இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- ❖ கப்பல் ஆவணங்களில் தெளிவின்மையைக் குறைத்தல், வழக்காடல் அபாயங்களைக் குறைத்தல் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் இந்தியாவின் நிலையை

வலுப்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தப் புதிய சட்டமானது எளிமைப்படுத்தப்பட்ட சட்ட மொழியையும் கொண்டுள்ளது மற்றும் சிக்கலான விதிகளை மறுசீரமைக்கிறது.

## இந்திய அரசின் வாகனவியல் கொள்கைத் திட்டம் 2047

- கனரக தொழில்துறை அமைச்சகமானது 2047 ஆம் ஆண்டு வாகனவியல் கொள்கைத் திட்டத்தினை (AMP 2047) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உலகளாவிய வாகன உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் இந்தியாவை ஒரு முன்னணி நாடாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2030, 2037 மற்றும் 2047 ஆம் ஆண்டுகளுக்காக என்று சில மேம்பாட்டு இலக்குகளை நிர்ணயிக்கும்.
- இந்த முன்னெடுப்பில் மின்சாரம், வணிகம், சாலைகள் மற்றும் சுற்றுச்சூழல் போன்ற அமைச்சகங்களுக்கிடையே ஒருங்கிணைப்பு அடங்கும்.
- இது அசல் உபகரண உற்பத்தியாளர்கள் (OEM), வாகனக் கூறு உற்பத்தி நிறுவனங்கள், கொள்கை உருவாக்க அமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் பயனர்களை உள்ளடக்கிய ஒரு தொழில்துறை தலைமையிலான உத்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




## NSCSTI 2.0


- டெல்லியில் உள்ள குடிமைப் பணி அதிகாரிகள் நிறுவனத்தில் (CSOI) குடிமைப் பணிகள் பயிற்சி நிறுவனங்களுக்கான 2.0 (NSCSTI 2.0) தேசியத் தரநிலைகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது திறன் மேம்பாட்டு ஆணையத்தினால் (CBC) உருவாக்கப்பட்டது.
- இந்தப் புதுப்பிக்கப்பட்டக் கட்டமைப்பு ஆனது, எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள குடிமைப் பணியை உருவாக்குவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியைக் குறிக்கிறது.
- NSCSTI 2.0 கட்டமைப்பு ஆனது குடிமைப் பணிகள் பயிற்சிக்கு ஒரு நெறிப்படுத்தப்பட்ட மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறையை அறிமுகப்படுத்துகிறது.
- மத்திய, மாநில மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (ULBs) உட்பட அனைத்து

அரசு நிலைகளிலும் உள்ள பயிற்சி நிறுவனங்களுக்கு இது பொருந்தக் கூடியது.

- இது இந்திய அறிவு அமைப்புகள் (IKS), கர்மயோகி திறன் மாதிரி (KCM) மற்றும் அம்ரித் கியான் கோஷ் (AGK) போன்ற முற்போக்கான கூறுகளை உள்ளடக்கியது.




## ஐ.நா. பேச்சுவார்த்தையில் ‘எதிர்காலத்திற்கான ஒப்பந்தம்’





- எதிர்காலத்திற்கான ஒப்பந்தம் மற்றும் அதன் முக்கிய இணைப்புகளான உலகளாவிய எண்ணிம உடன்படிக்கை மற்றும் எதிர்காலத் தலைமுறைகள் குறித்த பிரகடனத்திற்கு இந்தியா தனது உறுதியான ஆதரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தினை மறுபரிசீலனை செய்வதற்கான மூன்றாவது முறைசாரா பேச்சு வார்த்தையின் போது இது மேற்கொள்ளப்பட்டது.
- இந்த முறைசாரா பேச்சுவார்த்தையானது, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடுகளுக்கு 2028 ஆம் ஆண்டு ஒப்பந்த மறு ஆய்வுக்கு முன்னதாக கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு தளத்தை வழங்கியது.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதி நடைபெற்ற எதிர்காலத்திற்கான உச்சி மாநாட்டில், உலக நாடுகளின் தலைவர்கள் எதிர்காலத்திற்கான ஒப்பந்தத்தையும்

அதன் இணைப்புகளையும் ஏற்றுக் கொண்டனர்.

- இந்த ஒப்பந்தமானது அதன் இணைப்புகளான உலகளாவிய எண்ணிம உடன்படிக்கை மற்றும் எதிர்காலத் தலைமுறைகள் குறித்த ஒரு பிரகடனம் ஆகியவற்றுடன் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கடற்கரைப் பகுதிகளில் அணுசார் கனிமங்கள் எடுக்கும் உரிமை விதிகள், 2025




- புதிய விதிகளானது, 2002 ஆம் ஆண்டு கடற்கரைப் பகுதிகள் கனிம (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன.
- சுரங்கத் துறை அமைச்சகமானது, அணுசக்தித் துறையுடன் ஒருங்கிணைந்து இந்த விதியை அறிவித்தது.
- அணுசார் கனிமங்களின் செறிவு ஒரு குறிப்பிட்ட மற்றும் குறைந்தபட்ச அளவை விட அதிகமாக இருந்தால் மட்டுமே இந்த விதிகள் பொருந்தும்.
- அணுசக்தித் துறை மற்றும் அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் (AERB) ஆகியவை இதற்கான முதன்மை மேற்பார்வை நிறுவனங்களாகச் செயல்படும்.
- மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் கீழ் சார்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப் படாவிட்டால், பாதுகாப்பு, உள்துறை மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு மத்திய அமைச்சகங்களின் முன் பாதுகாப்பு அனுமதியுடன் மட்டுமே நேரடி பங்கேற்பிலிருந்து வெளிநாட்டு நிறுவனங்கள் தடை செய்யப் பட்டுள்ளன.
- விதிகளின் கீழ், அறிவிக்கப்பட்ட அரசு நிறுவனங்களுக்கு மட்டும் உரிமம் இல்லாமல் ஆய்வு அனுமதிக்கப் படும்.
- 2016 ஆம் ஆண்டு அணுசார் கனிமச் சலுகை விதிகளுக்கு இணங்க வரையறுக்கப் பட்டுள்ளபடி, வரம்பு சார்ந்தத் தரங்களுக்கு மேல் பின்னர் கண்டறியப்படும் அணுசார் கனிமங்கள் குறித்து உடனடியாக அணு சார் கனிமங்கள் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்திற்கு (AMD) தெரிவிக்கப்பட வேண்டும்.
- ஆய்வு மற்றும் உற்பத்தித் திட்டங்கள் ஆனது , "2024 ஆம் ஆண்டு கடற்கரைப் பகுதி

கனிம வளங்காப்பு மற்றும் மேம்பாட்டு விதிகளுக்கு" இணங்க வேண்டும்.

- இந்தியாவில் யுரேனியம் குறைவாகவே இருந்தாலும் தோரியத்தின் மிகப்பெரிய வளம் காணப்படுகிறது.
- இந்தியாவில் உள்ள பெரும்பாலான யுரேனியம் இருப்புகள் உலகின் முன்னணி யுரேனியம் உற்பத்தி செய்யும் நாடுகளுடன் ஒப்பிடும் போது சிறியதாகவும் மிகவும் குறைந்த தரத்திலும் உள்ளன.
- கேரளா மற்றும் ஒரிசாவின் கடற்கரை மணல்களில் மோனசைட் வளங்கள் நிறைந்து உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## Resistance Front - உலகளாவியத் தீவிரவாத அமைப்பு

- ஏப்ரல் 22 ஆம் தேதியன்று ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற்ற பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவுத் துறை Resistance Front அமைப்பினை "வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பு" என்றும் சிறப்பாக நியமிக்கப்பட்ட உலகளாவிய தீவிரவாத அமைப்பு (SDGT) என்றும் நியமித்தது.
- இது பாகிஸ்தான் நாட்டின் தீவிரவாதக் குழுவான லஷ்கர்-இ-தொய்பாவின் ஒரு கிளை அமைப்பாகும்.
- இந்த முடிவை வரவேற்ற இந்தியா உலகில் உள்ள பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகிய மூன்று தீமைகளை எடுத்துரைத்தது.
- ஓர் அமைப்பை FTO ஆக நியமிப்பது என்பது அமெரிக்கச் சட்டத்தின் கீழ் அத்தகைய அமைப்புக்கு நிதியளித்தல், உதவி செய்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் உதவுதல் குற்றமாகும்.





# பொருளாதாரச் செய்திகள்

## 2024-25 ஆம் நிதியாண்டில் தேயிலை ஏற்றுமதி செயல்திறன்


- 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 2.85% அதிகரித்துள்ளது.
- இந்திய நாட்டின் தேயிலை ஏற்றுமதியானது 250.73 மில்லியன் கிலோகிராமிலிருந்து

257.88 மில்லியன் கிலோகிராமாக அதிகரித்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் வட இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படும் தேயிலை ஏற்றுமதி 155.49 மில்லியன் கிலோகிராமாக இருந்தது.
- தென்னிந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படும் தேயிலை ஏற்றுமதி 100.68 மில்லியன் கிலோகிராமாக இருந்தது.
- இவை முறையே 10.28 சதவீதம் மற்றும் 11.02 சதவீதம் உயர்ந்துள்ளன.




## 2024/25 ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனப் பங்குத் தொகை




- கடந்த ஐந்து ஆண்டுகளில், மத்திய அரசானது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெற்ற பங்குத் தொகையை சற்றேறக்குறைய இரட்டிப்பாக்கி 74,000 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது.

- 2020-21 ஆம் நிதியாண்டிலிருந்து அரசாங்கம் சேகரித்த மொத்தப் பங்குத் தொகையில் 42% ஆனது எரிபொருள் தொடர்பான ஐந்து பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப் பட்டது.
- புதிய விதிகளின்படி, ஒவ்வொரு மத்திய பொதுத் துறை நிறுவனமும் அதன் வரிக்குப் பிந்தைய லாபத்தில் (PAT) குறைந்த பட்சம் 30% அல்லது அதன் நிகர மதிப்பில் 4% இவற்றுள் எது அதிகமாக உள்ளதோ அதைச் செலுத்த வேண்டும்.
- 2022-23 மற்றும் 2024-25 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் IOC மற்றும் BPCL அரசாங்கத்திற்கு அளித்த கூட்டுப் பங்குத்தொகை சுமார் 255% அதிகரித்து 2,435 கோடி ரூபாயிலிருந்து 8,653 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

## கோதுமை மற்றும் அரிசிக்கான இருப்பு விலைகள் 2025/26





- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ அமைப்பான உணவு மற்றும் பொது விநியோகத் துறை (DFPD), கோதுமை மற்றும் அரிசிக்கான இருப்பு விலைகளை நிர்ணயித்துள்ளது.
- இந்த தானியங்கள் வெளிச் சந்தையில் எவ்வளவு அளவு விற்கப்படும் என்பதை அது அறிவிக்கவில்லை, அதனை இந்திய உணவுக் கழகமே (FCI) முடிவு செய்யும்.
- வெளிச் சந்தை விற்பனைத் திட்டம்-உள்நாட்டு (OMSS-D) திட்டத்தின் கீழ் மையத் தொகுப்பிலிருந்து FCI அமைப்பு இணைய வழி ஏலங்கள் மூலம் வெளிச் சந்தையில் விற்கும் குறைந்தபட்ச விலையே இருப்பு விலையாகும்.
- பொது விநியோக முறை (PDS) மூலம் உணவு தானியங்களை FCI கொள்முதல் செய்து, சேமித்து, விநியோகிக்கிறது.
- FCI ஆனது, இந்தத் திட்டத்தின் கீழ் தானியங்களை, முக்கியமாக கோதுமை மற்றும் அரிசியை, வெளிச் சந்தையில் ஒரு வழி முறையாக இணைய வழி ஏலத்தின் மூலம் வழங்குகிறது.
- இந்த வழிமுறையானது உணவு தானியங்கள் கிடைப்பதை உறுதி செய்ய உதவுகிறது, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் குறைந்தபட்ச விலை நிலைகளைப் பேணுவதன் மூலம் விவசாயிகளுக்கு ஆதரவளிக்கிறது.

- 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிகளவில் சுமார் 117 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி என்பது பதிவானது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஹைட்ரஜன் பெராக்சைட்டின் பசுமைசார் உற்பத்தி





- சூரிய ஒளி மற்றும் தண்ணீரை ஓர் ஒளிச்சேர்க்கைக் காரணியைப் பயன்படுத்தி, தற்போது ஒரு சக்தி வாய்ந்த கிருமிநாசினியாக அதாவது ஹைட்ரஜன் பெராக்சைடு ($H_2O_2$) ஆக மாற்றலாம்.
- இதற்காக, S.N. போஸ் அடிப்படை அறிவியல் மையம் (SNBCBS), Mo-DHTA COF எனப்படும் ஒரு அதி நவீனப் பொருளைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கியுள்ளது.
- இந்த கண்டுபிடிப்பு ஆனது ஹைட்ரஜன் பெராக்சைடு உற்பத்திக்கு ஒரு தூய்மையான, மிகவும் திறம் மிக்க மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய வழிமுறையை வழங்குகிறது.
- உலோக ஆக்சைடுகள், கிராஃபிடிக் கார்பன் நைட்ரைடு (g-C3N4), பலபடிச் சேர்மங்கள் மற்றும் உலோக கரிம கட்டமைப்புகள் (MOF) போன்ற வழக்கமான ஒளிச்சேர்க்கைக் காரணிகள் பரந்த பட்டை இடைவெளிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிலைத்தன்மை காரணமாக வரம்புகளை எதிர்கொள்கின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய கடற்பாசி இனங்கள் - அல்லோகிராஃபா எஃபுசோசோரெடிகா

- இந்திய அறிவியலாளர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருந்து முன்னர் அறியப் படாத அல்லோகிராஃபா எஃபுசோசோரெடிகா எனப்படும் ஒரு வகையான கடற்பாசி / லைக்கன் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆய்வை புனேவில் உள்ள MACS-அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டது.
- மூலக்கூறு தரவுகளைக் கொண்டு கண்டறியப்பட்ட முதல் இந்திய அல்லோகிராஃபா இனத்தை இது குறிக்கிறது.
- இது இந்தியாவில் பதிவான 53வது இனமாகவும், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பதிவான 22வது இனமாகவும் உள்ளது.
- இது எஃபியூஸ் சோரேடியா (ஒரு வகை பாலின வேறுபாடற்ற இனப்பெருக்க அமைப்பு) மற்றும் ஓர் அரிய வேதியியல், அதனை ஒத்த இனங்களிலிருந்து வேறுபடுத்துகின்ற நார்ஸ்டிக்டிக் அமிலத்தால் வகைப்படுத்தப்படுகிறது.

- கடற்பாசியினத்தின் ஒளிச்சேர்க்கை உயிர்த்தொகுதி இணையானது ஒரு ட்ரென்டெபோலியா இனமாக அடையாளம் காணப்பட்டது என்பதோடு இது வெப்ப மண்டல கூட்டுவாழ்வுகளில் பாசி இனங்களின் பன்முகத் தன்மை பற்றிய தகவலை வளப் படுத்துகிறது.
- உருவவியல் ரீதியாக, இது கிராஃபிஸ் கிளாசெசென்ஸை பெருமளவில் ஒத்திருக்கிறது என்றாலும் இது அல்லோகிராஃபா சாந்தோஸ்போராவுடன் மரபணு ரீதியாக இணைக்கப் பட்டுள்ளது.
- கடற்பாசிகள் ஓர் உயிரினம் மட்டுமல்ல, மிக நெருக்கமான கூட்டுவாழ்வில் வாழும் இரண்டு (சில நேரங்களில் அதற்கு மேற்பட்டவை):
    - அமைப்பு மற்றும் பாதுகாப்பை வழங்கும் ஒரு பூஞ்சை மற்றும்
    - சூரிய ஒளியைக் கொண்டு உணவை உருவாக்கும் ஒரு ஒளிச்சேர்க்கைக் காரணி (பொதுவாக ஒரு பச்சை ஆல்கா அல்லது சையனோபாக்டீரியம்) ஆகும்.




# மாநிலச் செய்திகள்

## அருகி வரும் தாவர இன வளங்காப்பு திட்டம் – உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் மாநிலமானது 14 மிகவும் அருகி வரக்கூடிய "செந்நிறப் பிரிவில்" உள்ள தாவர இனங்களின் பட்டியலை புதுப்பிக்க ஒரு தனித்துவமான திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- நான்கு ஆண்டுகால சாகுபடி மற்றும் வாழ்விட ஆய்விற்குப் பிறகு அரிய தாவரங்களை அவற்றின் இயற்கை வாழ்விடங்களில் மீண்டும் அறிமுகப் படுத்துவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இப்பகுதியானது 69 சதவீத வனப்பகுதியையும், வனவிலங்கு வளங்காப்பில் வலுவான

தேசிய இருப்பையும் கொண்டுள்ளது.




## கேரளாவின் KITE முன்னெடுப்பு

- பொறுப்பான கல்வி தொழில்நுட்பத்தில், கேரள மாநிலத்தின் KITE முன்னெடுப்பினை உலகளாவியச் சிறந்த நடைமுறையாக யுனிசெஃப் அங்கீகரித்துள்ளது.
- கல்வியில் செயற்கை நுண்ணறிவை (AI) நெறிமுறையாக ஒருங்கிணைத்ததற்காக இது தேசிய மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தை ஈர்த்துள்ளது.
- கேரள உள்கட்டமைப்பு மற்றும் கல்விக்கான தொழில்நுட்பம் (KITE) ஆனது கேரளாவின் பொதுக் கல்வித் துறையின் தொழில்நுட்பப் பிரிவாக செயல்படுகிறது.




## எண்ணிம ரீதியான குற்றப் பதிவு மோசடியில் முதல் தண்டனை- மேற்கு வங்காளம்

- எண்ணிம ரீதியான குற்றப்பதிவு என்ற இணையவெளி மோசடி வழக்கில் இந்தியாவின் முதல் தண்டனை இதுவாகும்.
- இந்தத் தீர்ப்பில், மேற்கு வங்காள நீதிமன்றத்தினால் 9 பேருக்கு ஆயுள் தண்டனை

விதிக்கப்பட்டது.

- ❖ இந்தத் தீர்ப்பு நாடியா மாவட்டத்தில் உள்ள கல்யாணி நீதிமன்றத்தால் வழங்கப் பட்டது.
- ❖ அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 316(2)/317(4)/318(4)/319(2)/ 336(3)/338/ 340(2) /351(2)/3(5)/61(2) பிரிவுகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66C மற்றும் 66D ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



"Cybersecurity Thought of the Day"

**Landmark Cybercrime Verdict: First Sentence in a Digital Arrest Case**

For the first time in India, the Kalyani court of West Bengal has sentenced nine cyber criminals to life imprisonment for orchestrating a "digital arrest" scam- a major milestone in the realm of cyber law.

Case Summary
- Victim: Retired professor Partha Kumar Mukhopadhyay.
- Fraud Amount: 1 crore extorted via coercive WhatsApp calls.
- Modus Operandi: Fake identity as Mumbai Police, threats of digital arrest, forged documents, psychological pressure.
- Call Origin: Cambodia, using Indian SIM cards.
- Gang Network: Spread across Maharashtra, Haryana, Gujarat, and Rajasthan.
- Total Victims: Over 108 individuals, estimated fraud exceeding 100 crore.

Court Proceedings
- Trial Duration: Just 8 months after the October 2024 incident
- Convicts: Imtiyaz Ansari, Shahid Ali Shaikh, Shahrukh Rafik Shaikh, Jatin Anup Ladwal, Rohit Singh, Rupesh Yadav, Sahil Singh, Pathan Sumaiya Banu, and Faldu Ashoke.
- Charges: Criminal breach of trust, forgery, identity theft, impersonation under Bharatiya Nyaya Sanhita and the IT Act.
- Verdict: Life imprisonment for all accused.

Why It Matters
- India's first conviction of its kind- a powerful legal precedent.
- Prosecutors labeled it "economic terrorism".
- Highlights the strength of inter&state coordination in cybercrime investigations.
- Reinforces the need for public vigilance and digital awareness.

Cybercrime is evolving, so must our defense strategies. This verdict is not just justice for one professor, but a wake&up call for every citizen, policymaker, and enforcement authority. Deterrence is key to cybersecurity, instilling fear among cybercriminals is essential.

**Report scams to the National Cyber Crime Portal (1930) or local law enforcement agencies.**

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கீதா கோபிநாத்




- ❖ சர்வதேச நாணய நிதியத்தின் முதல் துணை நிர்வாக இயக்குநர் (FDMD) கீதா கோபிநாத், இந்த அமைப்பை விட்டு விலக/வெளியேற உள்ளார்.
- ❖ அவர் 2019 ஆம் ஆண்டில் தலைமைப் பொருளாதார நிபுணராக சர்வதேச நாணய

நிதியத்தில் சேர்ந்தார்.

- இந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணியான இவர், பின்னர் 2022 ஆம் ஆண்டில் FDMD ஆகப் பதவி உயர்வு பெற்றார்.

## சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டி 2025

- 2025 ஆம் ஆண்டின் 66வது சர்வதேச கணித ஒலிம்பியாட் (IMO) போட்டியானது ஆஸ்திரேலியாவின் சன்ஷைன் கோஸ்டில் நடைபெற்றது.
- இந்திய அணி 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதக்கத்தைப் வென்றுள்ளது.
- இதற்கு முன்னர் 1998 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் சிறந்த தரவரிசையை பெற்றது போலவே இந்த ஆண்டும் இப்போட்டியில் பங்கேற்ற 110 நாடுகளில் இந்தியா ஏழாவது இடத்தைப் பிடித்தது.
- IMO போட்டியில் இந்தியா மூன்று தங்கப் பதக்கங்களை வெல்வது இது இரண்டாவது முறையாகும் என்பதோடு முதல் முறையாக 1998 ஆம் ஆண்டில் அதனைப் பெற்றது.
- IMO போட்டியில் 2023 ஆம் ஆண்டில் 9வது இடத்தையும், 2024 ஆம் ஆண்டில் 4வது இடத்தையும், 2025 ஆம் ஆண்டில் 7வது இடத்தையும் பிடித்து இந்தியாவானது முதல் 10 இடங்களுக்குள் இடம் பெறுவது இது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகும்.





## கம்யூனிஸ்ட் தலைவர் V.S. அச்சுதானந்தன்

- முன்னாள் கேரள முதல்வரும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சின்னமாக விளங்கிய V.S. அச்சுதானந்தன் (101) காலமானார்.
- 1964 ஆம் ஆண்டில் பிரிக்கப்படாத கட்சியில் ஏற்பட்ட பிளவுக்குப் பிறகு அவர் CPM கட்சியின் நிறுவனத் தலைவராக இருந்தார்.
- அவர் 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார்.
- 2006 ஆம் ஆண்டில், அவர் CPM தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி கட்சியை வெற்றி பெறச் செய்து 2011 ஆம் ஆண்டு வரை அவர் முதலமைச்சராகப்


பணியாற்றினார்.

- அவர் ஏழு முறை சட்டமன்ற உறுப்பினர் ஆக இருந்தார் மற்றும் அவரது அரசியல் வாழ்க்கையில் 10 தேர்தல்களில் போட்டியிட்டார்.




## முக்கிய தினங்கள்

### உலக பாம்பு தினம் 2025 - ஜூலை 16




- இது பாம்பின் அழகு, பன்முகத் தன்மை மற்றும் சுற்றுச்சூழலில் அவற்றின் மதிப்பை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளவில் 3,000க்கும் மேற்பட்ட பாம்பு இனங்கள் வாழ்கின்றன, அவற்றுள் சுமார் 600

பாம்பு இனங்கள் விஷத்தன்மை கொண்டவை.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Respect, Don't Fear: Protecting Nature's Silent Guardians" என்பதாகும்.

### சர்வதேச நீதிக்கான உலக தினம் 2025 - ஜூலை 17

- 1998 ஆம் ஆண்டில் ரோம் சட்டத்தை ஏற்றதன் பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வினையும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ('ICC') நிறுவப்பட்டதையும் நினைவு கூரும் வகையில் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவியச் சமூகத்திற்கு ஆபத்தினை ஏற்படுத்துகின்ற மிகக் கடுமையான குற்றங்களை இழைக்கும் நபர்களைத் தண்டிக்க ICC உருவாக்கப்பட்டது.
- இத்தினமானது, உலகளாவிய அளவில் பொறுப்புணர்வை ஊக்குவிக்கிறது, பாதிக்கப் பட்டவர்களை சிறப்பிக்கிறது மற்றும் நீதியைப் பெறுவதில் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துகிறது.
- தற்போது 125 நாடுகள் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தின் உறுப்பினர் நாடுகளாக உள்ளன.
- உக்ரைன் நாடானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று ICC அமைப்பின் 125வது உறுப்பினர் நாடாக இணைந்தது.




## இதரச் செய்திகள்

### விரைவான பணப்பரிமாற்றங்களில் உலகளாவிய முன்னணித்துவம்

- சர்வதேச நாணய நிதியமானது சமீபத்தில், "Growing Retail Digital Payments: The Value of Interoperability" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியா விரைவான பணப்பரிமாற்றங்களில் உலகளவில் முன்னணியில் உள்ளது.
- தற்போது, இந்தியாவில் ஒவ்வொரு மாதமும் சுமார் 18 பில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை UPI செயல்படுத்துகிறது.

- இன்று, இந்தியாவில் உள்ள அனைத்து எண்ணிமப் பரிவர்த்தனைகளிலும் UPI 85 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இந்தியா ஜூன் மாதத்தில் மட்டும், சுமார் 24.03 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் பணப் பரிவர்த்தனைகளைக் கையாண்டது.




## இந்திய சிறு தானியத் தரநிலைகள்




- ரோமில் நடைபெற்ற 88வது கோடெக்ஸ் நிர்வாகக் குழுவில் (CCEXEC88) இந்தியாவின் சிறு தானியத் தரநிலைகள் மற்றும் கோடெக்ஸ் குழுக்களில் அதன் பங்கு ஆகியன அது குறித்த அங்கீகாரத்தைப் பெற்றது.
- கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் என்பது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உணவுத்

தர நிலைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் நடத்தை விதிகளின் தொகுப்பாகும்.

- இது உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கிறது, நுகர்வோரைப் பாதுகாக்கிறது மற்றும் உலகளாவிய உணவு வர்த்தகத்தில் மிகவும் நியாயமான வர்த்தக நடைமுறைகளை ஆதரிக்கிறது.
- இந்தியா, நறுமணப் பொருட்கள் மற்றும் சமையல் மூலிகைகளுக்கான கோடெக்ஸ் குழுவின் (CCSCH) தலைமைப் பொறுப்பினை 2014 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுள்ளது.

## NWA 16788 விண்கல் விற்பனை

- பூமியில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட செவ்வாய்க் கிரகத்தின் மிகப்பெரிய ஓர் அரிய விண்கல்லானது நியூயார்க் ஏலத்தில் 4.3 மில்லியன் (3.2 மில்லியன் பவுண்ட்) டாலர் மதிப்பில் விற்கப்பட்டது.
- NWA 16788 என அழைக்கப்படும் இந்த விண்கல் 54 பவுண்டுகள் (24.5 கிலோ) எடை கொண்டது.
- இது 2023 ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் நைஜரின் தொலைதூரப் பகுதியில் கண்டறியப் பட்டது.
- இது அடுத்து கண்டு எடுக்கப்பட்ட செவ்வாய்க் கிரகத்தின் பெரிய விண்கலை விட 70% மடங்கு பெரியது.





## இந்தியாவின் 44வது யுனெஸ்கோ பாரம்பரிய தளம்

- இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்புகள் ஆனது, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.
- இந்த மராட்டிய இராணுவ நிலப்பரப்புகளில் பன்னிரண்டு மாபெரும் கோட்டைகள் உள்ளன, அவற்றில் பதினொன்று மகாராஷ்டிராவிலும், ஒன்று தமிழ்நாட்டிலும் உள்ளது.
- இது தற்போது இந்தியாவின் 44வது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளத்தைக் குறிக்கிறது.
- இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்புகள் கி.பி 17 முதல் 19 ஆம் நூற்றாண்டு

வரை பரவியிருந்தன.

- மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களில் பரவியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தளங்களில், மகாராஷ்டிராவில் உள்ள சல்ஹெர், ஷிவ்னேரி, லோகாட், கண்டேரி, ராய்காட், ராஜ்காட், பிரதாப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா, விஜய்துர்க் மற்றும் சிந்து துர்க் ஆகியவை அடங்கும் என்பதோடு தமிழ்நாட்டில் உள்ள செஞ்சிக் கோட்டையும் இதில் அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அமைப்பானது அசாமின் 'மொய்தாம் - அஹோம் வம்சத்தின் கல்லறையினை' அதன் மதிப்புமிக்க உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்த்தது என்பதோடு இது இந்தியாவின் 43வது நியமிக்கப்பட்ட தளமாக அமைந்தது.
- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது பாரம்பரிய மேலாண்மை மற்றும் திட்டங்களுக்கான முதன்மை அமைப்பாகும்.
- இந்தியாவானது யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் குழுவில் (2021–2025) உறுப்பினராக உள்ளது.





## AK-203 துப்பாக்கி – அமேதி

- இந்திய ஆயுதப்படைகள் AK-203 தாக்குதல் துப்பாக்கிகளின் புதிய தொகுதியைப் பெற உள்ளன.
- இந்தோ-ரஷ்ய ரைபிள்ஸ் பிரைவேட் லிமிடெட் (IRRPL) என்பது உத்தரப் பிரதேசத்தின் அமேதியில், இந்தியாவில் 'ஷேர்' என்று பெயரிடப்பட்ட AK-203 ரக துப்பாக்கிகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட ஒரு கூட்டு துணிகர நிறுவனம் ஆகும்.
- AK-203 துப்பாக்கிகள் ஆனது AK-47 மற்றும் AK-56 துப்பாக்கிகளுடன் ஒப்பிடும் போது

கணிசமாக நவீனமானவையாகும்.

❖ அவை கலாஷ்னிகோவ் தொடரில் மிகவும் ஆபத்தான துப்பாக்கிகளில் ஒன்றாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★